இயக்குநரகம்
10 OCT 2024
சென்னை-600 005
உணவுப் பொருள் வழங்கல் (ம) நு. பா. துறை

**சுருக்கம்**

நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பயிற்சி பெற்ற சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்படும் விழிப்புணர்வுப் பயிற்சிக்கான செலவினத் தொகை ரூ.1,00,00,000/-யினை தமிழ்நாடு நுகர்வோர் நல நிதியிலிருந்து (Corpus) பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து மேற்கொள்ள ஒப்பளிப்பு செய்தும் மற்றும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகார சங்கத்தின் (TANSSCOPE) தலைவர் அவர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சியினை நடத்திட அதிகாரம் அளித்தும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எச்2) துறை**

**அரசாணை (நிலை) எண்.117**

நாள் 04.10.2024.

ஸ்ரீ குரோதி வருடம்,
புரட்டாசி மாதம் – 18.

திருவள்ளுவர் ஆண்டு – 2055.

படிக்கப்பட்டது:

ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கடிதம் ந.க.எண். நுவி2./ 15815/2024, நாள் 10.07.2024 மற்றும் 09.08.2024.

****

**ஆணை:**

தமிழ்நாடு சட்டப்பேரவையின் கூட்டத்தொடரின் போது, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் 27.06.2024 அன்று, 2024-2025 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண்.13-ன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> **நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பயிற்சி பெற்ற சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு, தமிழ்நாடு நுகர்வோர் நல நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் செலவில் விழிப்புணர்வுப் பயிற்சி நடத்தப்படும்."**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் (தற்போது இயக்குநர்) அவர்கள் அன்றாட வாழ்வில் கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ள சுய உதவிக் குழுக்கள் மூலம் முழுஅளவில் நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி அளிப்பதன் மூலம் பெருவாரியான மக்களிடையே, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்களிடையே நுகர்வோர்

த.பி.பா

உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் வாயிலாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களில் குறைந்தபட்சம் ஐம்பதாயிரம் முதல் இலட்சத்திற்கும் மேற்பட்ட கிராமப்புற மக்களிடையே நுகர்வோர் கல்வி குறித்த அடிப்படை விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்றும், நேர்மையற்ற வணிக நடைமுறைகள் குறித்த அறிவுத்திறனை நுகர்வோர்களிடையே மேம்படுத்திட ஏதுவாக இப்பயிற்சி முகாம் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இத்திட்டத்தினை கீழ்க்காணும் மூன்று படிநிலைகளில் செயல்படுத்திட முன்மொழியப்படுவதாக தெரிவித்துள்ளார்:-

<u>நடவடிக்கை 1 : பயிற்றுநர்களுக்கான பயிற்சி</u>

மாநிலத்தில் உள்ள 37 மாவட்டங்களை (சென்னை நகரம் வடக்கு/தெற்கு தவிர) காஞ்சிபுரம், விழுப்புரம், சேலம், தஞ்சாவூர், வேலூர், திருப்பூர், மதுரை மற்றும் திருநெல்வேலி என 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள மாவட்டங்களில், மாவட்டப் பட்டியலில் இடம்பெற்று நன்முறையில் செயல்பட்டுவரும் தன்னார்வ நுகர்வோர் அமைப்பிலிருந்து தேர்வு செய்யப்படும் இரண்டு பிரதிநிதிகளுக்கு, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019ன் சிறப்பம்சங்களை நன்கு அறிந்த தலைசிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு ஒருநாள் பயிற்சி வழங்குதல். இப்பயிற்சி கீழ்க்கண்ட பொருட்களை உள்ளடக்கிய பயிற்சியாகத் திகழும்.

i. <u>நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 2019</u>
- சட்டம் தொடர்பான அறிமுகம்
- நுகர்வோர் உரிமைகள்
- நுகர்வோர் கடமைகள்
- நுகர்வோர் உரிமை மீறல்கள்
- நேரடி விற்பனை
- தயாரிப்புசார் பொறுப்பு மீது கடுமையான விதிமுறைகள்
- நியாயமற்ற ஒப்பந்தங்கள்
- போலி விளம்பரங்கள் மற்றும் நுகர்வோர் நீதிமன்ற தீர்ப்புகள்
- முறையற்ற வணிகம்/மின்னணு வணிகம்
- சமரச தீர்வுக் குழு

ii. <u>நுகர்வோருக்கான நிவாரண வழிமுறைகளைப் பற்றிய விழிப்புணர்வு</u>
- E-Filing மூலம் புகார் செய்யப்படும் முறை
- நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள்
- நுகர்வோர் குழுக்கள்
- அரசுத்துறை முகமைகள்
- நுகர்வோருக்கு ஏற்படும் குறையினை உரிய முறையில் பதிவு செய்வதற்கான படிநிலைகள் குறித்த வழிகாட்டுதல்கள்
- பொது விநியோகத் திட்டம் குறித்த தகவல்கள்

iii. **<u>பொதுவாக அன்றாட வாழ்வில் நுகர்வோர் சந்திக்கும் சில இன்னல்கள்</u>**

- **<u>ஆரோக்கியம்</u>**: உணவுத்தரம், அளவு மற்றும் லேபிளிங், பாதுகாப்பான உணவு போன்றவை.
- **<u>பொது விநியோக திட்டம்</u>** : எடையின் அளவு குறைவு, விநியோகிக்கும் பொருட்களின் தரம், உரிய நேரத்தில் கடையினை திறக்காதது போன்றவை.
- **<u>மருத்துவம்</u>**: லேபிளிங், பாதுகாப்பான மருந்துகள், மருந்து கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் போன்றவை.
- **<u>பொது பயன்பாட்டு சேவைகள்</u>**: மின்சாரம், போக்குவரத்து, தொலைபேசி போன்றவை.
- **<u>சட்ட அளவைகள்</u>**: சட்டம் மற்றும் அளவீடுகள் மற்றம் பேக்கிங் விதிகள் தொடர்பானவை.
- **<u>முக்கிய இயற்கை வளங்களை நுகர்தல்</u>**: உணவு, நீர், எரிபொருள் மற்றும் ஆற்றல் போன்றவை.
- **<u>தரநிர்ணயம் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரமறிதல்</u>** : இந்திய தர நிர்ணய அமைவனத்தால் (BIS) தரநிர்ணயம் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரமறிதல்.

iv. <u>பயிற்சி முடிவின் தாக்கம்</u>

- 388 ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெறும் இப்பயிற்சிக்கான ஒருங்கிணைப்புகள் சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரால் மேற்கொள்ளப்படும். அவ்வகையில், பயிற்சி நிகழ்ச்சியின் முடிவில் மகளிர் சுயஉதவிக்குழுவின் ஒவ்வொரு பயிற்சி பிரதிநிதியும் அவர்கள் வசிக்கும் கிராமங்கள்/பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பான தகவல்களை கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

<u>நடவடிக்கை 2 : **ஊராட்சி ஒன்றியம் வாரியாக** மகளிர் சுயஉதவிக் குழுவிற்கான பயிற்சி.</u>

நடவடிக்கை-1ன்படி பயிற்சி பெற்ற 74 தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் பிரதிநிதிகளைக் கொண்டு 388 ஊராட்சி ஒன்றியங்களில் (Blocks), ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 100 உறுப்பினர்கள் வீதம் 38,800 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஒருநாள் பயிற்சி வழங்குதல்.

<u>நடவடிக்கை 3 : மகளிர் சுய உதவிக் குழு வாயிலாக கிராமப்புறங்களில் நுகர்வோர் விழிப்புணர்வு பிரச்சாரம்.</u>

பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் ஆர்வலர்களைக் கொண்டு கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புற

குடிசைப்பகுதிகளில் / பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவர்.

3. ஊராட்சி ஒன்றியம் வாரியாக மகளிர் சுய உதவிக் குழுவிற்கான பயிற்சி திட்டத்தினை செயல்படுத்திட ஆகும் தோராய செலவினங்கள் தொடர்பாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் (தற்போது இயக்குநர்) அவர்கள் பின்வருமாறும் தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | செலவினங்களின் விவரம் | ஊராட்சி ஒன்றியம் வாரியான செலவின விவரம் (ரூ) | தோராய செலவின மதிப்பு (ரூ) |
|---|---|---|---|
| 1 | 37 மாவட்டங்கள் (சென்னை நகரம் வடக்கு/தெற்கு தவிர) 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அதில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் உட்பட்ட மாவட்டங்களில் உள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்பிலிருந்து தேர்வு செய்யப்படும் இரண்டு பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்கும் வகையில் ஏற்படும் செலவினம் (பயிற்சி கையேடு, பயிற்றுநர்களுக்கான பயணப்படி, சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் இதர செலவினங்கள்)<br>16 பயிற்றுனர்கள் – 32,000/-<br>74 பயிற்சியாளர்கள் – 74,000/-<br>388 ஊராட்சி ஒன்றியங்களில் பயிற்சி வழங்குவதற்கான தளவாடங்கள் – 1,94,000/- | – | 3,00,000/- |
| 2 | 100 உறுப்பினர்களுக்கான பயிற்சி பொருட்கள் (100x35) (Scribbling Pad, Pen, Pencil, Pamphlet, File) | 3,500/- | – |
| 3 | 100 உறுப்பினர்களுக்கான உணவு மற்றும் சிற்றுண்டி, ஒரு உறுப்பினருக்கு ரூபாய் 100/- வீதம் (100x100) | 10,000/- | – |
| 4 | இரண்டு பயிற்சியாளருக்கான ஊக்கத்தொகை, ஒரு பயிற்சியாளருக்கு ரூபாய் 750/- வீதம் (750x2) | 1,500/- | – |
| 5 | பயிற்சியில் பங்கேற்கும் 100 உறுப்பினர்களுக்கான ஒரு நாள் உதவித்தொகை, ஒரு உறுப்பினருக்கு 100/- வீதம் (100x100) | 10,000/- | – |
| ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆகும் செலவினம் | | 25,000/- | – |
| மொத்தமுள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களுக்கு செயலாக்கம் செய்ய ஆகும் செலவின மதிப்பு (388x25,000) | | 97,00,000/- | |
| **மொத்த செலவினம் (தோராயமாக)** | | 1,00,00,000/- | |

மேற்படி பயிற்சித் திட்டத்தினை செயல்படுத்திட தேவைப்படும் செலவினத் தொகை ரூ.1,00,00,000/-யினை தமிழ்நாடு நுகர்வோர் நல நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்து உரிய அரசாணை வழங்குமாறு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் (தற்போது இயக்குநர்) அவர்கள் கோரியுள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பிறகு, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரின் அறிவிப்பிற்கு இணங்க, நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பயிற்சி பெற்ற சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு விழிப்புணர்வுப் பயிற்சி நடத்தப்படும் என்னும் அறிவிப்பினை செயலாக்கம் செய்ய தேவைப்படும் செலவினத் தொகை ரூ.1,00,00,000/-யினை [ரூபாய் ஒரு கோடி மட்டும்] தமிழ்நாடு நுகர்வோர் நல நிதியிலிருந்து (Corpus) பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**"3456 – 00 – நுகர்பொருள் வழங்கல் – 104 – நுகர்வோர் நலநிதி – மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UC – தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதியின் கீழ் செலவினம் – மாநில அரசின் பங்கு – 309 – உதவித்தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"**
**[IFHRMS DPC Code 3456 00 104 UC 30903]**

இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் சரிகட்டுதல் செய்யப்பட வேண்டும்.

**"3456 – 00 – நுகர்பொருள் வழங்கல் – 902 – கழிக்கவும் – சேம நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட தொகை – மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UC – கழிக்கவும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதியிலிருந்து செலவு செய்த தொகை – 330 – கணக்குகளிடையே மாற்றம் –01– கணக்குகளிடையே மாற்றம் "**
**[IFHRMS DPC Code: 3456 00 902 UC 33001]**

மேலும், கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் எதிர்- பற்று வைக்கப்பட வேண்டும்.

**" J – சேமநிதி (b) வட்டி பெறாத சேமநிதி 8229 00 வளர்ச்சி மற்றும் நலநிதி – 123 – நுகர்வோர் நலநிதி – AC – தமிழ்நாடு மாநில நுகர்வோர் நலநிதி (கார்பஸ்) முதலீட்டுக் கணக்கு மீதான வட்டி – 802 வழங்குதல் – 02 வட்டிபெறாதவை"**
**[IFHRMS த.தொ.கு 8229 –00 –123 AC 80202]**

த.பி.பா

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,00,00,000/- 2024-2025-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2024-2025-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியாக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, இயக்குநர் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2024-2025 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (கூ.உ.(ம).நு.பா / வ.செ.பொ-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் அவர்கள் சம்பளக் கணக்கு அலுவலகத்திலிருந்து (கிழக்கு) பெற்று, நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பயிற்சி பெற்ற சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு விழிப்புணர்வுப் பயிற்சியினை நடத்திடும் பொருட்டு, தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகார சங்கத்தின் (TANSSCOPE) தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. விழிப்புணர்வு பயிற்சி முடிவுற்றதும், முடிவு அறிக்கையுடன் பயனீட்டுச் சான்றினை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகார சங்கம் (TANSSCOPE) தலைவர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2392/நிதி (கூ.உ.(ம)நு.பா) துறை/2024, நாள்.04.10.2024-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் பேரேட்டு எண்.1012 (ஆயிரத்து பன்னிரெண்டு) (IFHRMS ASL No.2024101012)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>
இயக்குநர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சென்னை-600 005.

தலைவர், தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம்
(TANSSCOPE) சேப்பாக்கம், சென்னை- 600 005.
[இயக்குநர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சென்னை-600 005. (மூலமாக) ]
மாநில கணக்காயர், சென்னை - 600 018.
முதுநிலை கணக்கு அலுவலர், மாநில கணக்காயர் அலுவலகம்,
சென்னை-600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை (கிழக்கு) - 600 008/9.

<u>நகல்</u>
மாண்புமிகுஅமைச்சர் (உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நிதி (கூ.உ(ம) நு.பா) (வ.செ.பொ.I &II / வ.வ.I) )த்துறை,
சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

4/10/24

அரசு சார்புச் செயலாளர்
கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.